**DEPOSITIONS OF WITNESS**

**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE TIRUPPUR**

**CASE No** :SC 12/2023

Deposition of witness for PW 2 — Prosecution Witness 1
Defence

Name : Gunasekaran — Court ASJ

Father Name : Shanmugam

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly afirmed in accordance with the provisions of act X of 1873 of the day of 18.04.2023.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் காங்கேயம் ரோடு ராக்கியாபாளையம் பிரிவு மணியக்கார பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா 1 யை தெரியும். என்னுடைய வீட்டிற்கு அருகில் தான் குடியிருக்கிறார். கடந்த 20.12.2021 இரவு 9 மணிக்கு மேல் மன்னரையிலிருந்து மணியக்கார பாளையம் ரோட்டில்வீட்டிற்கு வந்து கொண்டு இருந்தபோது கருப்பசாமி கோவில் அருகே அ.சா 1 யை ஆஜர் எதிரிகள் சேர்ந்து வெட்டினார்கள். ஆஜர் எதிரிகளில் முதவாதாக நிர்கும் மஞ்சள் கலர் சட்டை அணிந்துள்ள நபர் எங்களது பகுதிக்கு இடம் வாங்கி தருவது சம்மந்தமாக பணம் வாங்க அடிக்கடி வந்துள்ளார். மீட்டிங் போடும் போது அவரை அடிக்கடி பார்த்துள்ளேன். எதிரிகள் நான்னு பேரும் சேர்ந்து அ.சா1 யை அடித்து கொண்டு இருந்தார்கள். மதன் ராஜும் பழனியும் கையில் அருள்வால் வைத்து இருந்தார்கள். தூர இருந்து பார்த்தபோது அது அ.சா1 என்பது தெரியவில்லை. நான் அருகில் சென்றவுடன் எங்களை பார்த்வுடன் எதிரிகள் ஓடிவிட்டார்கள். அப்போது என்னுடன் இன்னும் 2-3 நபர்களும் இருந்தார்கள். எங்களை பார்த்வுடன் எதிரிகள் ஓடிவிட்டார்கள். கிட்டே சென்று பார்த்தபோது அ.சா 1க்கு இரு கைகளிலும் பின் தலையிலும் வலது கால்களிலும் அடிப்பட்டு இருந்தது. அதிகமாக ரத்து போக்கு இருந்தால் விரல் துண்டானது அந்த

சமயத்தில் தெரியவில்லை. மருத்துவமனை சென்ற பிறகு தான் தெரியவந்தது. அவரை ஆட்டோவில் ஏற்றி திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI
Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.04.18 18:21:03 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.